செய்தி வெளியீடு எண். 192 நாள்: 07.04.2017

**திருவள்ளூர் மாவட்டத்தில், டாக்டர்.இராதாகிருஷ்ணன் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு 11.04.2017, 12.04.2017 மற்றும் 15.04.2017 ஆகிய மூன்று தினங்கள் டாஸ்மாக் கடைகள் மற்றும் மதுகூடங்கள் அனைத்தும் கண்டிப்பாக மூடப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

~~~~~

நெ.11, டாக்டர். இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதிக்கான இடைத்தேர்தலுக்கு 12.04.2017 அன்று வாக்குப்பதிவு நடைபெறுவதாலும், 15.04.2017 அன்று வாக்கு எண்ணிக்கை நடைபெறுவதாலும், அரசு ஆணை எண். (டி) 70 உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (VI) துறை நாள்: 31.03.2017 மற்றும் ஆணையர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் கடித எண். ம(ம)5(2) / 10803/2016, நாள்.31.03.2017-ன்படி, **10.04.2017 அன்று இரவு 12.00 மணி முதல் 12.04.2017 வரையிலும் மற்றும் 15.04.2017 அன்றும்** திருவள்ளூர் மாவட்டத்தில் இயங்கும் IMFS விற்பனை செய்யும் டாஸ்மாக் சில்லரை விற்பனை கடைகள் மற்றும் அதனைச் சார்ந்த பார்கள், FL2 (கிளப்புகள்), FL3 (ஹோட்டல்கள்) மற்றும் FL-3AA ஹோட்டல்களில் அமைந்துள்ள மதுக்கூடங்கள் அனைத்தும் கண்டிப்பாக மூடப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சியர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.
~~~~~